MAY 2022 **P/ID 35314/PTL1D**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடையளிக்க.

1. தமிழ் விடுதூது - நூற் பெருமையினைக் குறிப்பிடுக.

2. தமிழின் பட்டத்துப் பெண்கள் குறித்து எழுதுக.

3. திருவாய்மொழி கல்லாதவர்களைப் பள்ளன் எப்படித் தண்டிப்பதாகக் கூறுகிறான்?

4. முக்கூடற்பள்ளில் இடம்பெறும் நெல்வகை குறித்தெழுதுக.

5. மூத்த பள்ளி பண்ணையாரிடம் வேண்டியது யாது?

6. குற்றாலத்தில் வானரங்களின் அன்பு எவ்வாறு காட்டப்படுகிறது?

7. 'ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்' -இத்தொடர் உணர்த்தும் வளம் யாது?

8. கலம்பக இலக்கிய வகையின் தனித்தன்மையினைக் குறிப்பிடுக.

9. 'நீழல் வெண்குடை ஊழி நிற்கவே' என்னும் அடி நந்திவர்மனின் எப்புகழைப் பாடுகிறது?

10. ‘உறைபதி அகன்று தொழுமின் அலது உய்தல் அரிதே’ என்னும் அடி நந்திவர்மனின் எப்பெருமையைப் பாடுகிறது?

11. கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் குறித்தெழுதுக.

12. சோழ வீரர்கள் வெற்றியடைந்த பின் கைப்பற்றியன யாவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடையளிக்க.

13. பத்துப் பருவங்களாக வளர்ந்த தமிழின் பெருமைகளை எழுதுக.

14. தமிழுக்கும் சைவசமயக் குரவர்களுக்குமான நெருக்கத்தினை தமிழ்விடுதூதின் வழிநின்று விளக்குக.

15. முக்கூடற் பள்ளில் இடம்பெறும் ‘மழைக்குறிப் பாடல்’ குறித்து விளக்குக.

16. திருக்குற்றால மலை குறும்பலா ஈசரின் பெருமைகளை விளக்கியுரைக்க.

17. ‘நந்தி எம் கோன் அயிராவதத்தில் படுதிர் கொல்லோ’ என எதிரிகளிடம் கூறும் வீரம் குறித்து விளக்குக.

18. தெள்ளாற்று நந்திவர்மனின் பெருமை பேசி மகள் மறுக்கும் மறவரது செயலினை விரித்துரைக்க.

19. திருக்கடைக்காப்பில் இடம்பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடையளிக்க.

20. தூது செல்லும் தமிழ்மொழியின் பெருமைகளை தமிழ்விடுதூது இலக்கியத்தின் வழி நின்று விளக்குக.

21. பள்ளியர் பாடும் ஏசல் பாடலில் இடம்பெறும் புராண நிகழ்வுகளை விரித்தெழுதுக.

22. குறத்தியின் குறி சொல்லும் திறனை குறவஞ்சி இலக்கிய வழி நின்று விளக்குக.

23. 'யானும் கலியும் எவ்விடம் புகுவேம்' என்னும் நந்திக் கலம்பகப் பாடலின் பெருமைகளைத் தொகுத்தெழுதுக.

24. கலிங்கத்துப் பரணியில் 'களம் பாடும்' சிறப்புக்களை விரித்தெழுதுக.

———————